**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.86/2024**
**வழக்கு சாட்சி P.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆறுமுகம் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : கந்தசாமிகவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : தும்பலப்பட்டி | வயது | : சுமார் 65 |
| தாலுக்கா | : பழனி | நாள் | : 10.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

கிரைய தொகை எவ்வளவு என்றால் ? ரூ.6,50,000 ஆகும். முன்பண தொகை எவ்வளவு என்றால் ? ரூ.6,00,000 ஆகும். காலக்கெடு எவ்வளவு நாட்கள் என்றால் ? 3 வருட காலக்கெடு. ஒப்பந்ததொகை ரூ.6,50,000 நிர்ணயிக்கப்பட்டு தொகை ரூ.6,00,000 முன்பணமாக கொடுத்துள்ள நிலையில் மீதமுள்ள ரூ.50,000 தொகைக்காக எதற்காக 3 ஆண்டுகள் காலக்கெடு நிர்ணயம் செய்தார்கள் என்றால் ? வேறு வீடு பார்த்து காலி செய்யும் காலம் வரை 3 ஆண்டுகள் ஏற்படும் என்பதால் காலக்கெடு 3 ஆண்டுகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபரத்தை கிரைய உடன்படிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரிதான். பிரதிவாதி கடனுக்காக பணம் வாங்கினார் என்றாலும், சொத்தினை விற்பனை செய்ய பணம் வாங்கவில்லை என்றாலும் ? சொத்தினை விற்பனை செய்ய தான் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. கடனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் அல்ல. கடன் தொகைக்கு பொறுப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை வைத்து சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.10 ...:32 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்